பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 04 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மேற்குவங்க முதற்கட்டம் மற்றும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்றது.

**2.** மேற்குவங்கத்தில் **91** புள்ளி மூன்று ஐந்து சதவீதமும், தமிழகத்தில் **84** புள்ளி இரண்டு ஒன்பது சதவீதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

**3.** ரயில் பாதை கட்டமைப்பை நவீன மயமாக்குவதால் விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து உறுதி செய்யப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**4.** இந்தியா — கத்தார் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**5.** ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி, மும்பை அணியை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<<>>>>>>

மேற்குவங்க முதற்கட்டம் மற்றும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்றது.

மேற்குவங்கத்தில் 152 தொகுதிகளுக்கு நடைபெற்ற முதல்கட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் 91 புள்ளி மூன்று ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்கு செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பெரும்பாலான தொகுதிகளில் முதல் ஆறு மணிநேரத்திலேயே 60 சதவீதத்திற்கும் மேல் வாக்காளர்கள் வாக்களித்தனர்.

நகர்ப்புற பகுதிகளைவிட, ஊரகப்பகுதிகளில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

சில வாக்குச்சாவடிகளில் ஒருசில சம்பவங்களை தவிர வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாக நடைபெற்றது.

மேற்குவங்கத்தில 142 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இரண்டாம் கட்டமாக 29-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 84 புள்ளி இரண்டு ஒன்பது சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

அதிகபட்சமாக, கரூர் மாவட்டத்தில் 91 புள்ளி எட்டு ஆறு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் கோடை வெயிலையும் பொருட்படுத்தாது மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — கதிரவன் — 60 Sec. )***

ஈரோடு மாவட்டத்தில் மாலை ஆறு மணிக்குள் வந்தவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு, வாக்களிக்க அனுமதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — மூர்த்தி — 53 Sec. )***

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — அனுராதா — 42 Sec. )***

மாலை 6 மணிக்குள் வாக்குச்சாவடிகளுக்கு வந்தவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு தங்களது வாக்குரிமையை செலுத்த அனுமதிக்கப்படுவர் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் அடுத்த மாதம் 4-ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

<<<<<<<<>>>>>>

ரயில் பாதை கட்டமைப்பை நவீன மயமாக்குவதால் விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து உறுதி செய்யப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் எழுதிய கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், இருப்புப் பாதையை மேம்படுத்துதல், நவீன சோதனை முறைகள் மற்றும் மேம்பட்ட தகவல் பரிமாற்ற கட்டமைப்பு உள்ளிட்டவை தரமான போக்குவரத்து வசதியையும் விரைவான ரயில் சேவையையும் உறுதி செய்யும் என்று கூறியுள்ளார்.

இந்த புதிய முறை கொண்டுவரப்படும்போது ரயில்கள் தாமதமின்றி பயணிக்க வழி ஏற்படும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளர்.

<<<<<<<<>>>>>>

இந்தியா — கத்தார் இடையேயான வர்த்தக உறவுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்

கத்தார் வர்த்தகத்துறை அமைச்சர் டாக்டர் **Ahmed Bin Mohammed Al Sayed**-வுடன் காணொலி வாயிலாக உரையாடியபின் சமூக வலைதளத்தில் திரு பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள பதிவில் இதனை கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே முதலீடு மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்த ஆலோசனை மேற்கொண்டதாக அவர் கூறினார்.

<<<<<<<<>>>>>>

நாட்டில் விமான நிலையத் திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணித்து வருவதாக மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன்நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பான ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி பேசிய அவர், இத்திட்டங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, விமான நிலைய மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

இந்தியாவில் முதலீடுகளை ஈர்க்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியின் **Munich**-ல் பாதுகாப்பு முதலீடு உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவில் உற்பத்தித் தொடங்க ஜெர்மன் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜெர்மன் நிறுவனங்களுடன் ரேடார், சென்சார் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்பட இந்திய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

மேற்காசிய போர் சூழலால் உள்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாக பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், சமையல் எரிவாயு விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக கூறினார்.

நேற்று மட்டும் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டு உபயோக சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வீட்டு உபயோக சிலிண்டர்கள் DAC-யில் சரிபார்க்கப்பட்ட பிறகே விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வர்த்தக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இம்மாதத்தில் இதுவரை ஒரு லட்சத்து 40 ஆயிரம் டன் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று மட்டும் 8 ஆயிரத்து 400 டன் விநியோகம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

புலம்பெயர் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ஒரு லட்சத்து 27 ஆயிரம், 5 கிலோ சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய கப்பல் போக்குவரத்துத்துறை கூடுதல் செயலர் திரு முகேஷ் மங்கல், Hormuz நீரிணைப் பகுதியில்

கடந்த 24 மணிநேரத்தில் வெளிநாட்டு கப்பல்கள் மீது சில தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், ஆனால் இந்திய கப்பல்கள் மீது எவ்வித தாக்குதலும் நடைபெறவில்லை என்றும் கூறினார்.

கப்பலில் பயணம் செய்த இந்திய மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கப்பல் போக்குவரத்து கட்டுப்பாட்டு அறை 24 மணிநேரமும் செயல்பட்டு, உரிய தகவல்களை அளித்து வருவதாகவும் திரு முகேஷ் மங்கல், கூறினார்.

வளைகுடா நாடுகளுக்கான கூடுதல் வெளியுறவுச் செயலர் திரு அசீம் மகாஜன் செய்தியாளர்களிடம் பேசுகையில், மேற்காசிய பகுதியில் நிகழும் மாற்றங்களை வெளியுறவுத்துறை தொடர்ந்து கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி, மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

-------------------

பானிபட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

தென்கொரியாவின் **Gwangju**-வில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — ஜப்பானின் **Takeru Yuzuki** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஜெர்மனியின் **Daniel Masur,** இந்தியாவின் நிக்கி கலியாண்டா - தாய்லாந்தின் **Pruchya Isaro** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

---------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், கேரளா இன்று ஒடிஷா அணியை எதிர்கொள்கிறது.

கொச்சியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

**<<<<<<<<END>>>>>>**